நாவலர் சிலை திறப்பு விழா

நாவலர் சிலை தேசபவனி

முதலிய அம்சங்கள் அடங்கிய

# நாவலர் மாநாடு

பற்றிய திட்டங்கள், உத்தேச நிகழ்ச்சிகள்,

சபையின் அறிக்கை

கொண்ட

# கையேடு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை

கொழும்பு.

தேசிய நூலக பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

246.P

0750

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம். 99

உ

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை
# ஆட்சிக் குழு அறிக்கை

தமிழ் மக்கள் செய்த தவப்பயனாய் அவதரித்த நாவலர் பெருமான் சைவ சமயத்துக்கும் செந்தமிழுக்கும் புரிந்த பணிகள் மிகப் பல. சென்ற நூற்றாண்டில் ஈழத்தில் அவர் தோன்றியிருக்காவிடில், தமிழ் மக்களின் வரலாறே திசைமாறி இருக்கும். சைவத்தின் மறுமலர்ச்சிக்கும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும். கல்வித்துறையில் தமிழினத்தின் விழிப்பு உணர்ச்சிக்கும் அவர் ஆற்றிய அருந்தொண்டுகள் என்றும் நிலைத்து நிற்கக்கூடியவை; எம்மால் ஏழேழு தலைமுறைக்கும் ஏற்றிப் போற்றப்படவேண்டியவை.

நாவலர் பெருமானின் திருநாமத்தைப் போற்றிப் பரப்பவும், அவர் நினைவாகப் பல பணிகளைப் புரியவும் வேண்டுமென எண்ணங் கொண்டு, சென்ற 17-6-68 அன்று, இலங்கை நடைமுறைத் தமிழியக்கத்தாரால், கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில், கூட்டப்பட்ட கூட்டத்தில் 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாலவர் சபை' என்ற பெயர் கொண்ட இச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நோக்கங்கள் :

(அ) நாவலர் பெருமானின் போதனைகளையும், கருத்துக்களையும் பரப்புதல்.

(ஆ) நாவலர் பெருமானின் தர்மசாதனச் சொத்துக்களை மீட்டு எடுத்து, அவற்றை, அவரின் நோக்கத்திற்கமையப் பரிபாலித்தல்.

(இ) நாவலர் பெருமான் தொடக்கிய கல்வித் தர்மங்களைத் தொடர்ந்து வளர்த்து விஸ்தரித்தல்.

(ஈ) நாவலர் பெருமானின் நூல்களையும், அன்னாரைப்பற்றிய நூல்களையும் அச்சிட்டுப் பரப்புதல்.

(உ) நாவலர் பெருமான் நினைவாக நூலகம், கல்விச்சாலை, அனாதை விடுதி, முதலியவற்றைத் தாபிப்பதுடன், சமய வளர்ச்சிக்காக மடாலயம், வேதாகம பாடசாலை, குரு மார் பயிற்சி நிலையம், முதலியவற்றை நிறுவுதல்.

(ஊ) நாவலர் பெருமான் ஞாபகார்த்தமாகப் பல்கலைக் கழ கங்களில் மாணவர் கல்வி உபகார நிதி ஏற்படுத்தல்.

(எ) நாவலர் பெருமானுக்கு சிலை அமைத்தல்.

(ஏ) இன்னும் சைவ சமயம், தமிழ், இலக்கியம், கலை கலா சாரம் என்பவற்றின் வளர்ச்சிக்காக உழைத்தல்.

ஆட்சிக் குழு:

சபையின் சட்டதிட்டங்கள் தயாரிக்கப்பட்டு சென்ற 10-12-68ல் நடைபெற்ற விசேஷ பொதுச்சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன. 19 பேர்களைக்கொண்ட ஆட்சிக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது:

## இதுவரை செய்தவை:

### 1. சபையின் பதிவு:

இச்சபையை தர்மஸ்தாபன சட்டத்தின் கீழ் பதிவு செய் வதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. சபையின் பதிவும் சட்டதிட்டங்களும் கௌரவ நீதி அமைச் சர் அவர்களினால், அரசாங்க வர்த்தமானி மூலம் விரைவில் பிரகடனஞ் செய்யப்பட உள்ளது.

### 2. அங்கிகரிக்கப்பட்ட அற நிலயம்

கல்வி வளர்ச்சி, நாவலர் நூலகம், வேதாகம பாடசாலை மற்றும் பிரசுர வேலைகளுக்காக "கல்விப்பணி நிதி"யும் நாவ லர் பெருமான் உருவச்சிலைத் திருப்பணிக்காக "நாவலர் சிலை நிதி"யும் ஆக இரு நிதிகளை இச்சபை தொடக்கியுள் ளது. "கல்விப்பணி நிதி"க்கு நன்கொடை வழங்குபவர் கள், அத்தொகைகளுக்கு வருமானவரி விதிப்பிலிருந்து விலக்

குப் பெறக்கூடியதாக, இச்சபையை அங்கீகரிக்கப்பட்ட ஓர் அற நிலையமாக கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் சென்ற 14-3-69 அரசாங்க வர்த்தமானி மூலம் பிரகடனஞ் செய்துள்ளார்.

3. வங்கிக் கணக்கு :

சபையின் பண வைப்பு எடுப்புக்காக, இலங்கை வங்கியில் கணக்குத் திறக்கப்பட்டுள்ளது. எமது சபையின் கணக்கு இலக்கம் 17284.

மேலே குறிப்பிடப்பட்ட, சபையின் நிர்வாக அமைப்புச் சம்பந்தமான நடவடிக்கைகளைத் தவிர, கீழ்க்கண்ட விஷயங்களையும் இச்சபை செய்துள்ளது.

4. நாவலர் வாரம் :

வரலாற்றிலே முதற் தடவையாக, சென்ற ஆண்டு நாவலர் தினத்தை, டிசம்பர் 5 முதல் 11 வரை நாவலர் வாரமாக, நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடச் செய்திருந்தோம். இலங்கையின் சகல பகுதிகளிலும் குறிப்பிட்ட நாவலர் வாரத்தில் நூற்றுக்கும் அதிகமான நாவலர் விழாக்கள், கலாசாலைகள், கலை இலக்கிய மன்றங்கள், சைவ ஸ்தாபனங்கள் தமிழ் வளர்ச்சிச் சங்கங்கள் முதலியவற்றின் ஆதரவில் கொண்டாடப்பட்டன. சகல தமிழ்ப் பத்திரிகைகளும் நாவலர் வாரத்தையொட்டி சிறப்பிதழ்கள் வெளியிட்டன. நாவலர் வாரம் முழுவதும் இலங்கை வானொலி, நாவலர் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது. எம் சபை ஏற்பாடு செய்திருந்த நாவலர் வாரத்தைச் சிறப்பாக்கித் தந்த அனைவர்க்கும் எம் நன்றி உரியது.

5. நாவலர் முத்திரை:

நாவலர் பெருமானின் திருவுருவம் பதித்த அஞ்சல் தலைகளை வெளியிடும்படி இச்சபை அரசாங்கத்தை கோரியுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தபால் தந்தி அமைச்சக நிரந்தரச் செயலாளர் சென்ற 1-3-69ல் எமக்கு அறிவித்துள்ளார்.

6. நாவலர் சிலை :

நாவலர் பெருமானின் உருவச் சிலையை வார்க்கும் வேலைசென்ற 1-11-68ல் ஆரம்பிக்கப்பட்டது. வெண்கல உலோகத்தில், சுமார் 25 ஆயிரம் ரூபா செலவில் இச்சிலை வார்க்கப்படுகின்றது. ஈழத்திலும் இந்தியாவிலும் புகழ் மிக்க பிரபல சிற்பக் கலைஞர் கும்பகோணம் திரு. எம். என். மணிவண்ணன் இச்சிலையை வடிக்கின்றார். இச்சிலையை எதிரேவரும் ஆனிப்பூரணையன்று (29-6-69) நாவலர் பிறந்த பதியில் திறந்து வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வைபவத்தை ஈடிணையற்ற பெருவிழாவாக 3 நாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வதற்காக மாநாட்டுக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது

7. நிதி :

சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு, நிதி சேகரிப்பதற்காக சென்ற 11-3-69 அன்று, நாட்டியச் செல்வி கீதாஞ்சலி சிவாஜிதுரை அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சியொன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. அந் நிகழ்ச்சி மூலமும், அதையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலரின் விளம்பரங்கள் மூலமும் சுமார் 50 ஆயிரம் ரூபா சேர்ந்தது. ஏற்கனவே இச்சபைக்கு நன்கொடை வழங்கிய பெருமக்களுக்கும், நாட்டிய விழாவுக்குப் பேராதரவளித்த பெரியார்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் அனைவர்க்கும் நன்றி தெரிவிப்பதுடன், நாட்டிய விழாவை வெற்றிகரமாக அமைப்பதற்கு இரவு பகலாக ஓயாது உழைத்த நாட்டிய விழா அமைப்புக் குழுவுக்கு நெஞ்சார்ந்த பாராட்டையும் தெரிவிக்கின்றோம்.

## செய்ய இருப்பவை :

நாவலர் பெருமானின் உருவச்சிலை நிறுவுவது தமிழ் மக்களின் நீண்ட நாளைய கனவும், இச்சபையின் குறிக்கோள்களில் ஒன்றுமாகும். எம் இனத்தின் வாழ்வின் வழிகாட்டியும். மகாபுருஷருமான அவரின் ஞாபகமாக சிலை மட்டும் நிறுவினால் போதாது. இன்னும் எவ்வளவோ செய்ய வேண்

டும். அதற்காக, தமிழ் மக்களின் ஒத்துழைப்புடன், கீழ்க் கண்டவற்றைச் செய்து முடிப்பதற்கு இச்சபை திட்டமிட்டுள்ளது.

1. நாவலர் நூலகம்:

நாவலர் பெருமானின் நூல்கள், நாவலர் பெருமானைப் பற்றிய நூல்கள் முதலியன அடங்கிய நூலகமாக ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படக் கூடிய, நவீன வசதிகளுடன் இது அமைக்கப்படும்.

2. நாவலர் நூற்பதிப்பகம்:

நாவலர் நூல்களை மலிவுப் பதிப்பில் அச்சிட்டுப் பரப்பவும், தமிழ் வளர்ச்சிக்கும், சைவ வளர்ச்சிக்கும் பயன்படக் கூடியதாக எழுதப்படும் நூல்களை அச்சிட்டு வெளியிடவும், அல்லது அப்படியான நூல்களை வெளியிடுபவர்களுக்கு உதவி புரிந்து ஊக்குவிக்கவும் திட்டங்கள் கொண்டதாக நாவலர் நூற்பதிப்பகம் நிறுவப்படும்.

3. நாவலர் வேதாகம பாடசாலை:

வேதாகமம், சைவசித்தாந்தம், மற்றும் சைவ நூல்களைப் போதிப்பதற்கும், சைவக்குருமார்களையும், சைவப்பிரசாரகர்களையும் உருவாக்குவதற்கும் உரிய கலாசாலையாக அமைக்கப்படும்.

4. நாவலர் சைவப்பிரகாச மடம்:

குருபூசைகள், புராண படனம், சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்தக்கூடிய நவீன வசதிகள் கொண்ட மண்டபமும், சமயாசாரியார்கள் ஆசார அனுஷ்டானங்களுக்கமையத் தங்கியிருந்து சிவபூசை யாற்றக்கூடிய அறைகளும் கொண்டதாக அமைக்கப்படும்.

5. நாவலர் ஞாபகார்த்த உபகார நிதி:

சைவசித்தாந்தம், தமிழ் முதலிய துறைகளில் ஆராய்ச்சி செய்வதற்காகச் சிறப்பாகவும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பொதுவாகவும் பயன்படக்கூடிய பல திட்டங்களைக் கொண்டதாக இந்நிதி நிறுவப்படும்.

முடிவுரை:

ஈழத் தமிழ் மக்களின் இதயத்தில் நீண்டநாளாக இருந்துவந்த ஆசையை நிறைவேற்ற-நாவலர் பெருமான் மறைந்து 90 ஆண்டு களுக்குப்பின் அவரின் முதலாவது உருவச்சிலையை நிறுவ, இச் சபைக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது மாபெரும் பாக்கியமாகும். சபை ஆரம்பிக்கப்பட்டு இன்னும் ஓராண்டு கூடப் பூர்த்தியாக வில்லை. திருவருளின் துணையாலும், பெரியார்களின் ஆதரவாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பாலும், சபை உறுப்பினர்களின் சலியாத உழைப்பாலும் தான் இது சாத்தியமாகிறது.

நாவலர் பெருமானின் நினைவாக, இச்சபை தொடங்க இருக் கும் ஏனைய பணிகளிலும் இறைவனின் ஆசீர்வாதமும் சகலரது ஒத்துழைப்பும் பூரணமாகக் கிடைக்கவேண்டுமென வேண்டு கிறோம்.

திருவருளின் துணைகொண்டு அண்மையில் நிகழ இருக்கும் சிலை திறப்பு விழா சரித்திரம் காணாத பெருவிழாவாக அமைவதற்கு, சகல தமிழ் பேசும் மக்களும் தங்களின் பங்கைச் செலுத்துவதற்கு முன்வருவார்களென நம்புவதுடன், பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்து, விழாவைச் சிறப்பிக்கும்படியும் வேண்டுகிறோம்.

வணக்கம்.

வாழ்க நாவலர்!

ஓங்குக அவர் புகழ்!

ம. ஸ்ரீகாந்தா
பொதுச் செயலாளர்
(ஆட்சிக்குழு சார்பில்)

59, நொறிஸ்கனல் வீதி,
கொழும்பு-10.
1-5-1969.

# நாவலர் மாநாடு

ஈழ நாட்டின் தவப்புதல்வர், நல்லை நகர் தந்த செல்வம், ஆறுமுக நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை திறப்பு வைபவம், அவர் பிறந்த பதியில், எதிரே வரும் ஜூன் மாசம் 29ம் நாள் அன்று சிறப்புற நடைபெற இருக்கின்றது. பெருவிழாவாகக் கொண்டாடப்பட உள்ள இச்சம்பவம் வரலாற்றில் இடம் பெறும் என்பதில் சந்தேகமேயில்லை. நாடெங்கும் நாவலர் நாமம் பரவ, அவர் புகழ் வளர, நாளெல்லாம் அவர் நினைவு நம்முடன் நிலவ, எம் சிந்தையெல்லாம் குளிர, இப்பெரு விழா— இணையற்ற திருவிழாவாக அமைந்து தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் வழிகோல வேண்டும். நாவலரைப் போற்றி எடுக்கும் ஏற்றமிகு விழாவுக்காகத் தீட்டப்பட்டுள்ள மாநாட்டுத் திட்டங்களையும், உத்தேச நிகழ்ச்சி விபரங்களையும் நாட்டு மக்களாகிய உங்கள் திருமுன் பெருமகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம். அத்துடன்;

நாவலர் மாநாடுகாண, எம் இனக்
காவலர் புகழ்பாட,

"சேரவாரீர் செகத்திரே" என
இருகரங்கூப்பி அழைக்கின்றோம்.

வணக்கம்

**நா. இரத்தினசபாபதி**
மாநாட்டுக் குழுத் தலைவர்

**நா. சோமகாந்தன்**
அமைப்புச் செயலாளர்
மாநாட்டுக் குழு சார்பில்

**ம. ஸ்ரீகாந்தா**
பொதுச் செயலாளர்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

## மாநாட்டுத் திட்டங்கள்

1. நாவலர் பெருமானையும் அவர் பணிகளையும் நம் நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும்; அவரைப் போற்ற வேண்டும். இதற்குரிய வகையில் மாநாட்டு நிகழ்ச்சிகள் இருக்கும்.

2. இதற்காக நாவலர் பெருமானின் திருஉருவச் சிலை நாட்டின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுவதுடன்,

அவரின் நூல்கள் அனைத்தையும் கொண்ட கண்காட்சியும் ஏற்படுத்தப்படும்.

3. நாவலர் பெருமானின் சகல பணிகளையும் விரிவாக விளக்கும் ஆராய்ச்சிக் கருவூலமாக "நாவலர் மாநாட்டு மலர்" வெளியிடப்படும்.

4. நாவலர் பெருமானைப் போற்றுவதுடன், தமிழ் மக்களின் கல்வி, கலாசாரம், சமயம், கலை, இலக்கியம் முதலியவற்றின் வளர்ச்சியை விளக்கி அவற்றை முன்னேக்கிச் செலுத்தக்கூடியதாக மாநாடு அமையும்.

## உத்தேச நிகழ்ச்சிகள்

### சிறப்பு விழா 21-6-69

கொழும்பில், கொட்டாஞ்சேனையிலிருந்து வெள்ளவத்தைவரை சிலை ஊர்வலம். தேசத் தலைவர்கள் நாவலருக்கு அஞ்சலி. தேசு பவனி புறப்பாடு.

### சிலை தேச பவனி: 22-6-69 முதல் 28-6-69 வரை

கண்டி
நாவலப்பிட்டி
நுவரெலியா
பதுளை
திருகோணமலை
அனுராதபுரம்
வவுனியா ஊடாக யாழ் குடாநாட்டை அடையும்

### சிலை திறப்பு விழா: 29-6-69 (இடம்: நல்லூர்)

மாபெரும் மாநாட்டு ஊர்வலம், கலாசார ரதங்களின் அணிவகுப்பு, நாவலர் நூற்காட்சி, நாவலர் மாநாட்டு மலர் வெளியீடு, சிலை திறப்புப் பெருவிழா.

### சிறப்பு மாநாடு: 30-6-69—1-7-69

உரை அரங்கம்
கவி அரங்கம்
கருத்தரங்கம்
கலையரங்கம்

## மேலும் சில குறிப்புகள்:

**தமிழகத்திலிருந்து**
**அறிஞர்கள்; கலைஞர்கள்**

★ மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்புரைகளாற்றுவதற்கு திருவாவடுதுறை ஆதீனம் மகாவித்துவான் திரு. எஸ். தண்டபாணி தேசிகர் அவர்கள் உட்பட பலர் வருகின்றார்கள்.

★ உலகப்புகழ் கிளாரினட் வித்துவான் திருச்சி ஏ. கே. சி. நடராசன் குழுவினரின் கச்சேரி விசேஷ கலைநிகழ்ச்சியாக இடம்பெறும்.

**நாவலர் நூற்காட்சி:**

நாவலர் பெருமானினதும், அவரைப்பற்றியதுமான நூல்கள், பத்திரிகைகள், நாவலர் பாவித்த பொருட்கள், நாவலரின் மாணுக்கர்களின் படங்கள் முதலியனகொண்ட இக்கண்காட்சி ஜூன் 29, 30, ஜூலை 1 ஆகிய மூன்று நாட்களிலும் நடைபெறும்.

**"நாவலர் மாநாட்டு மலர்"**

தருமபுர ஆதீன குரு மகாசந்நிதானம், திருவாவடுதுறை குரு மகாசந்நிதானம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, யோகி சுத்தானந்த பாரதி, பேராசிரியர் வி. செல்வநாயகம், வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், கி. லக்ஷ்மண ஐயர், கலாநிதி பொ. பூலோகசிங்கம், கலாநிதி க. கைலாசபதி, சாலை இளந்திரையன், எஸ். அம்பிகைபாகன், ஏ. எம். ஏ. அசீஸ், வித்துவான் சொ. சிங்காரவேலன், நா. பார்த்தசாரதி, 'சோமலே', வித்துவான் வி. சி. கந்தையா, பேராசிரியர் நெய்னுர் முக்மது, திருமதி மகேஸ்வரி மகாதேவா முதலியோர் எழுதிய நாற்பதுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கியது. அழகிய அமைப்பு, உறுதியான பைன்டிங், காலமெல்லாம் வைத்துப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கருத்துப் புதையலாகத் தயாராகின்றது. பிரதி ஒன்றின் விலை ரூ. 25/=

**கலாசார ரத பவனி:**

நாவலர் பெருமானின் வாழ்க்கைச் சம்பவங்கள், தமிழரின் கலாசாரக் காட்சிகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் அழகு ரதங்கள் இப்பவனியில் இடம் பெறும். இதில் பங்கு கொள்ளக்கூடிய ரதங்களை அமைக்க விரும்பும் சங்கங்கள், கலைஞர்கள், வர்த்தக நிறுவனங்கள், அமைப்பாளர்களுடன் விரைவில் தொடர்பு கொள்ள வேண்டும்.

**சிலை திறப்பு விழாச் சிறப்பிதழ்:**

மாநாட்டையொட்டி வெளியிடப்படும் இரண்டாவது மலர். இதில் விழாச் செய்திகள், நிகழ்ச்சி விபரங்கள், சிறப்புக் கட்டுரைகள் பல இடம்பெறுகின்றன. நாவலர் உருவச் சிலை மூவண்ணத்தில் அட்டைப் படமாக இடம்பெறுகின்றது. கொழும்பு விழாவிலும், சிலை பவனி செல்லும் பாதைகளிலும், யாழ்ப்பாணத்தில் விழா நாட்களிலும் விநியோகிக்கப்படும். சுமார் 250 பக்கங்கள். இதில் வர்த்தகர்களின் விளம்பரங்களும் இடம்பெறும்.

**விளம்பர விகிதம்:**

| | | |
|---|---|---|
| பின் வெளி அட்டை | ரூபா | 500-00 |
| பின் உள் அட்டை | ரூபா | 350-00 |
| முதற் பக்கம் | ரூபா | 300-00 |
| முன் உள் அட்டை | ரூபா | 350-00 |
| சாதாரண முழுப் பக்கம் | ரூபா | 200-00 |
| ,, ½ பக்கம் | ரூபா | 125-00 |
| ,, ¼ பக்கம் | ரூபா | 75.00 |

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **மெய்கண்டான்**
161, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன் 29345

சிலை பவனி விபரம்: தங்கும் நேரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 22-6-69 — காலை | 7-30 | — | நித்தம்புவ | (15 நிமி) |
| ,, | 8-30 | — | வரக்காப்பொலை | (15 நிமி) |
| ,, | 9-30 | — | கேகாலை | (15 நிமி) |
| ,, | 10-30 | — | மாவனல்லை | (15 நிமி) |
| ,, | 11-30 | — | பேராதனை | (3 மணி) |
| பி. ப. | 2-30 | — | கண்டி | (30 நிமி) |
| ,, | 4-00 | — | கம்பளை | (15 நிமி) |
| ,, | 5-00 | — | நாவலப்பிட்டி | (இரவு) |
| 23-6-69 — காலை | 7-30 | — | ஹட்டன் | (30 நிமி) |
| ,, | 8-45 | — | தலவாக்கலை | (15 நிமி) |
| ,, | 11-00 | — | நுவரெலியா | (3 மணி) |
| பி. ப. | 4-00 | — | ஹாலி எல | (15 நிமி) |
| ,, | 4-45 | — | பதுளை | (இரவு) |
| 24-6-69 — காலை | 7-00 | — | பசறை | (15 நிமி) |
| ,, | 9-00 | — | லுணுகலை | ( 5 நிமி) |
| ,, | 1-00 | — | செங்கலடி | (2 மணி) |
| ,, | 3-30 | — | ஏறாவூர் | (30 நிமி) |
| ,, | 5-00 | — | மட்டக்களப்பு | (இரவு) |
| 25-6-69 — பகல் | 12-00 | — | திருகோணமலை | (3 மணி) |
| மாலை | 6-00 | — | அனுராதபுரம் | (1 மணி) |
| இரவு | 8-00 | — | வவுனியா | (இரவு) |
| 26-6-69 — காலை | 7-30 | — | ஓமந்தை | (15 நிமி) |
| ,, | 8-30 | — | புளியங்குளம் | (15 நிமி) |
| ,, | 9-15 | — | மாங்குளம் | (30 நிமி) |
| ,, | 10-00 | — | முறிகண்டி | (45 நிமி) |
| பகல் | 12-00 | — | பளை | (2 மணி) |

27-6-69 — யாழ் மாவட்டத்தில் பவனி.
28-6-69 — யாழ் மாவட்டத்தில் பவனி.

## வெளியூர் அன்பர்கள்

மாநாட்டுக்கு வரும் வெளியூர் அன்பர்களின் உணவு, தங்குமிடம் முதலிய வசதிகள் செய்யப்பட இருப்பதால், அவர்கள் முன்னதாகவே அமைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு, பெயர்களைப் பதிவு செய்யும்படி வேண்டப்படுகின்றனர்.

# நாவலர் மாநாட்டுக் குழு

தலைவர்

திரு. நா. இரத்தினசபாபதி
அதிபர், மெய்கண்டான்
42, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு-13.

செயலாளர்

திரு. நா. சோமகாந்தன்
110, கோட்டடி வீதி, கொழும்பு-12.

பொருளாளர்

திரு. எஸ். சிவசுப்பிரமணியம்
சிறுப்பர், ஸ்டேட் பாங்க், கொழும்பு-1.

கலாசாரப் பகுதி அமைப்பாளர்

திரு. ஐ. தி. சம்பந்தன்
துறைமுகக் கூட்டுத்தாபனம், கொழும்பு-1.

பொது இணைப்பாளர்கள்

திரு. ம. ஸ்ரீகாந்தா O. B. E.
நிரந்தரச் செயலாளர், காணி மின்விசை அமைச்சு.

செனட்டர் த. நீதிராசா J. P.
89, புதுச் செட்டித்தெரு, கொழும்பு-13.

யாழ். விழா ஏற்பாடுகளின் இணைப்பு அலுவலாளர்கள்

திரு. த. முருகேசபிள்ளை
உதவி அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்.

திரு. கே. தனபாலசிங்கம்
வடபிரதேச வருமானவரி அதிகாரி-யாழ்ப்பாணம்.

சிலை தேசபவனி அமைப்பாளர்

திரு. பொ. அட்சரமூர்த்தி
கணக்காளர், நீர்ப்பாசன இலாகா
இரத்மலானை.

சிறப்பிதழ்ப் பொறுப்பாளர்

திரு. க. க. சுப்பிரமணியம்
வரிமதிப்பாளர், சுங்கப்பகுதி, கொழும்பு-1

## தேசபவனியின் பாதுகாப்பு ஒழுங்கு

**திரு. கா. விஸ்வலிங்கம்**
பொலிஸ் தலைமை அலுவலக நிர்வாக அதிகாரி,

## கொழும்பு விழா அமைப்பாளர்கள்

**Dr. கு. நித்தியானந்தம்**
வைத்திய ஆராய்ச்சிநிலையம், பேஸ்லைன்வீதி, கொழும்பு

**திரு. செ. தில்லைநாதன்**
அதிபர் ரில்லி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், கொழும்பு-10.

**திரு. கே. நாகலிங்கம் J. P.**
கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.

**திரு. ஏ. கே. இராஜேந்திரன்**
அதிபர், ஏ. கே. கோல்ட் ஹவுஸ்
செட்டியார் தெரு, கொழும்பு.

**திரு. வி. சுபேந்திரநாதன்**
வரி மதிப்பீட்டாளர், உள்நாட்டு இறைவரி இலாகா
கொழும்பு-1.

## சிறப்பிதழ் விளம்பரச் சேகரிப்பு

**திரு. க. சிவசுப்பிரமணியம்**
பொறியியலாளர், மின்சாரத் திணைக்களம்,
கொழும்பு-2.

**திரு. எஸ். கல்யாணசுந்தரம்**
Chamber of Commerce
கொழும்பு-1.

**திரு. பொ. தேவதாசன்**
யானை பீடி கம்பனி, கொழும்பு-13.

**திரு. வெ. சண்முகராசா**
புதுச்செட்டித் தெரு, கொழும்பு-13.

**எம். எஸ். கந்தசாமி**
அதிபர் லலிதா நகை மாளிகை
கொழும்பு.

**திரு. ராஜு**
அதிபர் லீலா தங்க மாளிகை,
செட்டியார் தெரு, கொழும்பு.

**திரு. க. சு. நடராசா**
அதிபர் யாழ்டன் ஸ்ரோர்ஸ், கொழும்பு-11.

# பொது நிர்வாக உறுப்பினர்கள்

திரு. அ. இராமநாதன்
சமூகசேவை இலாகா கொழும்பு-2.

திரு. க. இளையதம்பி
நடைமுறைத் தமிழியக்கம், கொழும்பு.

திரு. கே. எம். காளியப்பாபிள்ளை
கொழும்பு.

திரு. இ. சண்முகம் J. P.
ஹோட்டன் பிளேஸ், கொழும்பு-7.

திரு. எஸ். அம்பிகைபாகன்
மணிமனை, மல்லாகம்.

திரு. சி. சின்னத்துரை
கல்கி பீடி அதிபர், யாழ்ப்பாணம்.

திரு. சி. நாகராசா
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.

திரு. இ. சுந்தரலிங்கம்
பொலிஸ் அதிபர், யாழ்ப்பாணம்.

திரு. ஏ. ஏ. ஜோசப்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

திரு. கே. சி. தங்கராசா
கிழக்கிலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு-7.

திரு. இ. வைத்திலிங்கம்
பொறியியலாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

திரு. இரா. சபாலிங்கம்
அதிபர், மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

திரு. ஆ. துரைராசசிங்கம்
துணை முதல்வர், யாழ்ப்பாணம்.

திரு. எஸ். தணிகாசலம்
வடமாநிலகல்வி அதிகாரி, யாழ்ப்பாணம்.

மற்றும், கண்டி, நாவலப்பிட்டி, நுவரெலியா, பதுளை, மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய இடங்களில் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளும் அடங்குவர்.

# யாழ். பிரதேச உபகுழுக்கள்

## கலை நிகழ்ச்சி பொறுப்புகள்

திரு. கே. தனபாலசிங்கம், கலையரசு க. சொர்ணலிங்கம், திரு. பரம் தில்லைராசா, திரு. த. முருகேசபிள்ளை

## கலாசார பவனி ஏற்பாடுகள்

திரு. எஸ். தணிகாசலம் கலாகேசரி ஆ. தம்பித்துரை திரு. பரம் தில்லைராசர

## மாநாட்டுப் பந்தல் நகரலங்கார அமைப்புகள்

திரு. சி. நாகராசா (நகராதிபதி)

திரு. ஆ. துரைராசசிங்கம் (உதவி மாநகராதிபதி)

திரு. எஸ். ரி. சுந்தரம் (மாநகர ஆணையாளர்)

திரு. இ. வைத்திலிங்கம் (பொறியியலாளர்)

திரு. இ. சுந்தரலிங்கம் (யாழ். போலிஸ் அதிபர்)

திரு. சி. சின்னத்துரை (கல்கி பீடி அதிபர்)

## யாழ். பிரதேச சிலைபவனி ஒழுங்குகள்

திரு. ஏ. ஏ. ஜோசப் (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்), சாவகச்சேரி D. R. O., நெல்லிப்பழை D.R. O., பருத்தித்துறை D. R. O., சங்கானை D. R. O., கோப்பாய் D. R. O., ஊர்காவற்றுறை D. R. O.

## வெளியூர் பிரதிநிதிகளின் உணவு-தங்குமிட வசதிகள்

திருவாளர்கள் : செனட்டர் த. நீதிராசா, சி. சின்னத்துரை (அதிபர், கல்கி பீடி), நா. இரத்தினசபாபதி (அதிபர், மெய்கண்டான்) எஸ். தணிகாசலம் (வடமாநில கல்வி அதிபதி) எஸ். யு. சோமசேகரம் (முன்னாள் கல்வி உதவி அதிபதி) மு. ஞானப்பிரகாசம் (அதிபர் பரமேஸ்வரக் கல்லூரி) இரா. சபாலிங்கம் (அதிபர் மத்திய கல்லூரி)

## விளம்பரங்கள் சேகரிப்பு

திரு. சங்கரன்
(சுபாஸ் கபே உரிமையாளர்)

திரு. எஸ். ஏ. ஆறுமுகம்

திரு. செல்வரத்தினம்
(A. F. C. யாழ்ப்பாணம்)

திரு. சி. சின்னத்துரை

திரு. குணரத்தினம்
(சாரி எம்போரியம்)

திரு. சி. எஸ். கனகரத்தினம்

திரு. கனகலிங்கம்
(மில்க்வைட் சோப் உரிமையாளர்)

திரு. ஏ. எஸ். ஆறுமுகம்

## நிதி சேகரிப்பு

திருவாளர்கள்

எம். கனகசபை

ஆ. தனபாலசிங்கம்
(வழக்கறிஞர்)

த. சிவலிங்கம்

முதலியார் சி. முத்துத்தம்பி

செ. தனபாலசிங்கம்
(முன்னுள் மாவட்ட நீதிபதி)

க. முருகரத்தினம்

எஸ். ஆர். கனகநாயகம்
(நியாய துரந்தரர்)

எம். கனகரத்தினம்
(வழக்கறிஞர்)

சி. சின்னத்துரை

டாக்டர் கே. கனகரத்தினம்

எஸ். தணிகாசலம்

நா. தம்பிரத்தினம்

ஏ. ஏ. ஜோசப்

பி. குமாரசாமி
(A. C. C. D. யாழ்ப்பாணம்)

கே. தனபாலசிங்கம்

க. அமிர்தசிங்கம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

246.P

அச்சுப்பதிவு ;
மெய்கண்டான் அச்சியந்திரசாலை லிமிட்டெட்
161, செட்டியார் தெரு,
கொழும்பு.